வெருகல் பிரதேச சபை
-----------------------------------------
திருகோணமலை மாவட்டம்
------------------------------------------

1. நிதிக்கூற்றுகள்
------------------------

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
--------------------------------------------------------

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 28 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை 2020 ஆகஸ்ட் 12 மற்றும் 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதிகளில் சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
--------------------------------------------------

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் வெருகல் பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை
---------------------------------------------------------------------------------------------------

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்
-----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 5,266,800 தொகையில் பிரதேச சபைக்கான அலுவலக உத்தியோகத்தர் விடுதி நிர்மாணிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட போதிலும் இன்றுவரை இத் தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | விடுதியின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | குறித்த 5,266,800 பெறுமதியான விடுதி அடுத்த வருடம் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களில் உரிய கணக்கில் சேர்த்துக் கொள்ளபடும் என்பதை அறியத் தருகின்றேன். |

(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) பெறவேண்டிய கணக்கு | | |
| பல்வேறுபட்ட நபர்களிடமிருந்து பெற வேண்டிய கடை வாடகை நிலுவை, குடிநீர் விநியோக கட்டணம் மற்றும் இயந்திர வாடகை நிலுவை போன்றவற்றின் மூலம் ரூபா 538,278 தொகையை அறவிட பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த ரூபா 538,278 நிலுவைகள் தொடர்பாக போதிய விபரங்கள் இல்லை ஆனாலும் இது தொடர்பாக உரிய ஆதாரங்கள் திரட்டப்பட்டு அறவீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அல்லது பொருத்தமானவற்றை பதிவழிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதை அறியத் தருகின்றேன். |
| (ii) செலுத்தவேண்டிய கணக்கு | | |
| 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் புறநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புனரமைப்பு செய்யப்பட்ட வேலைகள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் PSDG, CBG மற்றும் சபை நிதிகள் மூலம் செய்யப்பட்ட வேலைகள் மீது முறையே பிடித்துவைக்கப்பட்ட ரூபா 3,507,716 மற்றும் ரூபா 560,048 தொகை உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு மீளசெலுத்த அல்லது அவற்றை வருமானத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த பிடிகாசு மீதிகளில் 2020 இல் ரூபா 44,013 கொடுத்து தீர்க்கப்பட்டுள்ளது. மீதி பிடிகாசு மீதிகள் தொடர்பாக இவ் ஆண்டில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

| கணக்கு விடயம் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 04 கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக ரூபா. 64,462,017 ஆன சொத்துக்களின் மீதியை கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிக்க முடியாதுள்ளது. | தேவையான பதிவேடுகள் பேணுவதற்கும் இணைப்புக்கள் இணைப்பதற்கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேடு பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மற்றும் காணி உறுதி பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். பொறித் தொகுதி, மோட்டார் வாகனங்கள் வண்டிகள், குடிநீர் இணைப்பு ஆகியவற்றக்கான விபரப் பட்டியல் அடுத்த நிதியாண்டில் இறுதிக் கணக்கறிக்கை தயாரிக்கப்படும் போது இணைக்கப்படும். |

1.4 இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 12(1) | சபையில் நிதி, கொள்கைத் திட்டமிடல், வீடமைப்பு, சமூக அபிவிருத்தி, தொழிநுட்பச் சேவைகள், சுற்றாடல் மற்றும் பொது வசதிகள் போன்ற விடயங்களுக்காக தனித்தனி குழுக்கள் நியமிக்கப்பட்டு ஆலோசனைகள் பெறப்பட வேண்டும். இருந்தும், சபை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து இன்று வரை இக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கவில்லை | தேவையான குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆலோசனைக் குழுக்கள் தொடர்பாக சபையுடன் கலந்து ஆலோசித்து புதிய நான்கு நிலையியற் குழுக்களும் அமைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் X பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒப்பீட்டு அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வருமானம் தொடர்பாக வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிட்டு முரன்பாட்டிற்கான அட்டவனை அடுத்தவருடம் நிதிக்கூற்று தயாரிக்கப்படும் போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் பிரிவு 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 485,499 தொகையான கேள்வி, நானாவித, பிடிகாசு மற்றும் ஏனைய வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்த ரூபா 485,499 கூட்டுமொத்த தொகையான வைப்புக்கள் மற்றும் பிடி காசு தொடர்பாக இவ் வருடத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |
| ஈ) 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்க | சபையின் செயலாளரால் உள் வருகை மற்றும் வெளிச்செல்கை நேரப்பதிவினை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட | தற்போது விரல் அடையாள இயந்திரம் முலம் உள்வருகை மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| ள் அமைச்சின் நிர்வாக சுற்றறிக்கை 09/2009 இன் 02 (iv) பிரிவு | விரலடையாளப் பதிவு இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தாமல் விடுமுறை தினங்களில் சபையில் வேலை செய்ததாகக் குறிப்பிட்டு ரூபா 67,993 தொகை விடுமுறை தினக் கொடுப்பனவாக கொடுக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | வெளிச்செல்லும் பதிவுகள் உறுதிப்படுத்தப்பட்டு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. |

2. நிதி மீளாய்வு
------------------------

2.1 நிதிசார் விளைவுகள்
----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,738,646 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,344,198 ஆக இருந்தது.

2.2 வருமான நிர்வாகம்
-------------------------------

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்
------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” |
| வாடகை | 2,070 | 1,592 | 1,736 | 491 | 1,684 | 922 | 1,253 | 505 |
| ஏனையவை | 962 | 385 | 385 | 266 | 3,990 | 1,849 | 2,863 | 256 |
| மொத்தம் | 3,032 | 1,977 | 2,121 | 757 | 5,674 | 2,771 | 4,116 | 761 |

2.2.2 கடையை வாடகைக்கு வழங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் கடைத்தொகுதியில் உள்ள D இலக்கக் கடை 05 வருட ஒப்பந்தத்தில் 2018 பெப்ரவரி 01 ஆம் திகதி வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இருந்தும், குத்தகையாளன் ஒப்பந்தத்தை அவரது இயலாமை காரணமாக 2018 நவம்பர் ஒப்பந்தத்தை இடைநிறுத்தினார். இதற்கமைய வாடகை நிலுவை ரூபா 79,200 தொகையும் அதன் மீதான தண்டப்பணம் ரூபா 7,920 தொகை குத்தகையாளனிடமிருந்து அறவிடப்படாததுடன் அவரால் வைப்புச்செய்யப்பட்ட ரூபா 144,000 தொகை பாதுகாப்பு பிணையும் வருமானத்திற்கு மாற்றப்படாது உள்ளது. | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்த குத்தகையாளரிட மிருந்து வருமதியாக உள்ள ரூபா 79,200 மற்றும் தண்டப்பணம் ரூபா 7,920 ஆகியவற்றை அவரது ரூபா 144,000 வைப்புப்பணத்தில் இருந்து சீர் செய்வதெனவும் எஞ்சிய தொகையை உரிய நடமுறைகளைப் பின்பற்றி வருமானத்திற்கு மாற்றம் செய்வதென அறியத்தருகின்றேன். அத்தோடு கேள்வி கோரி புதியவர்களுக்கு வழங்குவதற்கான நடடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றேன். |

2.2.3 முத்திரைத் தீர்வை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உரிய வருமானம் பெறப்படுவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். | 2017, 2018, 2019 ஆகிய வருடங்களிற்கான முத்திரைக் கட்டணங்களை கணீப்பீடு செய்து பெற்றுக் கொள்வதற்காக பதிவாளர் நாயகத்திடம் கடிதம் முலம் கோரப்பட்டுள்ளது |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

(அ) நிலையான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்குச் சட்டத்தின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய இலக்கு தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்திற்கு ஏற்ப உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது. |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு கிழக்கு மாகாண உள்@ராட்சி திணைக்களத்தால் ரூபா 89,848 தொகை டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்காக 2017 ஒக்டோபர் 02 ஆம் திகதியில் வழங்கப்பட்டிருந்த போதிலும், இவ் நிதி குறித்த நோக்கத்திற்காக திட்டமிடப்பட்டு பயன்படுத்தப்படாது சபையின் வைப்புக் கணக்கில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | வேலைத்திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு உரிய பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | டெங்கு ஒழிப்பு திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 89,848 இவ்வருடத்தில் உரிய நோக்கத்திற்காக அல்லது அதனோடு தொடர்பான சுகாதார சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் ஒரு நூலகர் ஆளணி அனுமதிக்கப்பட்டிருந்தும் இரு வருடங்களுக்கு மேலாக நூலகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆளணியினைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நூலகர் ஒருவரை நியமிக்குமாறு ஏலவே அறிவிக்கப்பட்டு இருந்தது. எனினும் மீண்டும் எழுத்து மூலம் அறிவித்து உரியநியமனம் நடைபெறும் போது கோரிப் பெற்றுக் கொள்வதென அறியத்தருகின்றேன். |

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக் கொள்ளப்பட்ட 15 வாகனங்கள் 08 வருடங்களுக்கு மேலாகியும் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சபையின் பெயருக்கு மாற்றப்படாத 08 வாகனங்கள் தொடர்பாக இவ்வருடத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான இரு திறந்த சந்தைக் கட்டிடம் மற்றும் கடைத் தொகுதிகளைக் கொண்ட ரூபா 2,272,800 பெறுமதியான கடைத் தொகுதியானது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரைக்கும் மற்றும் ரூபா 1,483,472 பெறுமதியான ICE தொழிற்சாலைக் கட்டிடம் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது. | சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | சந்தைக்கட்டிடம் மற்றும் ஐஸ்தொழிற்சாலை என்பன தொடர்பாக மீளத்திறத்தல் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | பத்து வாகனங்கள் 04 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது பயனற்றுக் காணப்படுவதுடன் அவற்றிக்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இவ்வாகனங்கள் தொடர்பாக நிதி கிடைக்கப்பெற்றதும் திருத்தம் செய்யப்படும். |
| (iii) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 384,200 தொகைக்கு 121 குப்பைகளை சேகரிக்கும் பிளாஸ்டிக் தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததில் கணக்காய்வுத் திகதியான 2020 யூன் 10 ஆம் திகதிவரை சபையில் 83 தொட்டிகள் களஞ்சிய அறையில் வைக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | குறித்த குப்பை சேகரிக்கும் தொட்டிகளை பொருத்தமான பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

(இ) வருடாந்த இருப்புக் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட இருப்புக் கணக்கெடுப்பின் போது நான்கு வகையான பொருட்களில் 127 உருப்படிகள் பற்றாக்குறையாகக் காணப்பட்டமை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2018, 2019 ஆண்டிற்கான இருப்புக் கணீப்பிட்டின் படி குறைவான பொருட்கள் தொடர்பாக இவ்வாண்டில் தொடர்நடவடிக்கை எடுக்கப்படும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வுத் திகதியான 2020 யூன் 12 ஆம் திகதி வரை நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வின் நோக்கத்தை அடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வின் பின் உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றது.என்பதை அறியத்தருகின்றேன். |

4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஆரம்பிக்கப்பட்டு 04 குழுக் கூட்டங்கள் நடைபெற்ற போதிலும், குழுப் பரிந்துரைகள் செயற்படுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் முன்னேற்றங்கள் பரீசீக்கப்பட்டு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |